# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான
# இலகுவழி மாதிரிப் பரீட்சை - 44

**ஆசிரியர் : P.அம்பிகைபாகன்**

**வினாத்தாள் - 2**

**1 மணி 15 நிமிடங்கள்**

**(அரச பரீட்சையைத் தழுவிய மாதிரிப் பரீட்சை)**

**பின்வரும் பாடல்களை வாசிக்க.**

**கல்லும் மலையும் குதித்து வந்தேன் – பெரும்**
**காடும் செடியும் கடந்து வந்தேன்**
**எல்லை விரிந்த சமவெளி – எங்கும் நான்**
**இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்**

**ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் – பல**
**ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன்**
**ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் – மணல்**
**ஓடைகள் பொங்கிட ஓடி வந்தேன்.**

**மேற்குறித்த இரு பாடல்களையும் பயன்படுத்தி 1 தொடக்கம் 6 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. இப்பாடலில் 'வந்தேன், வந்தேன்' என்று கூறுவது யார்? ( ............................................................ )
02. இப்பாடலில் விவரிக்கப்படுவது உற்பத்தியான இடம் யாது?( ............................................................ )
03. 'வனம்' என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை தெரிவு செய்து எழுதுக.
( ............................................................ )
04. 'இறங்காத பள்ளங்கள்' என்ற சொற்களுக்குரிய எதிர்ச் சொற்களைத் தெரிவு செய்து எழுதுக.
( ............................................................ )
05. இப்பாடல்களில் உள்ள அடுக்கு மொழி எது? ( ............................................................ )
06. இப்பாடல்களில் எவைகள் நிரப்பப்பட்டன எனக் கூறப்பட்டுள்ளது?
( ............................................................ )

**07. பின்வரும் ஒவ்வொரு வாக்கியமும் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளத்தை எதிரே உள்ள புள்ளிக் கோட்டின் மீது இடுக.**

01. எனது புத்தகப்பையில் நிறைய புத்தகங்கள் உள்ளது. (................)
02. மான் கூட்டம் தோட்டத்தில் புகுந்தது (................)
03. ஒவ்வொரு பூவும் வாடி விழுந்தன. (................)
04. பாரதியார் பாடல்கள் சிறந்த கருத்துள்ளவை. (................)

**08. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

| | | | |
|---|---|---|---|
| 01. | i. தமிழில் | ii. தமிலில் | iii. தமிளில் |
| 02. | i. பல்கலைக்களகம் | ii. பல்களைக்கழகம் | iii. பல்கலைக்கழகம் |
| 03. | i. நுண்னுயிர்கள் | ii. நுண்ணுயிர்கள் | iii. நுன்னுயிர்கள் |
| 04. | i. பிரையாணம் | ii. பிரயாணம் | iii. பிறையாணம் |

**09. பின்ரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.**

01. தலைமறைவாதல் : ..........................................................................................
02. தலை காட்டுதல் : ..........................................................................................
03. நாக்கு நீளுதல் : ..........................................................................................
04. வாய் காட்டுதல் : ..........................................................................................

**10. சரியானதன் கீழ்க் கீறிடுக.**

01. 'கோயில்' என்ற சொல்லில் உள்ள உயிர்க்குறிகள் எவை?
- i. இரட்டைக் கொம்பு, சங்கிலிக்கொம்பு
- ii. இரட்டைக் கொம்பு, விசிறி

02. 'காலை' என்ற சொல்லில் உள்ள உயிர்க்குறிகள் எவை?
- i. அரவு, சங்கிலிப் கொம்பு
- ii. விசிறி, சங்கிலிக் கொம்பு

**11. படத்தைப் பார்த்து அவை ஆங்கிலத்தில் அழைக்கப்படும் பெயரை ஆங்கிலத்தில் எழுதுக.**






**1.** ................... **2.** ................... **3.** ................... **4.** ...................

**12. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து ஆங்கிலத்தில் எழுதுக.**

01. நான் எனது தாயாரை நேசிக்கின்றேன்.

.............................................................................................................................................

**13. வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.**

01. WHO IS THAT? ..........................................................................................
02. WHAT IS THIS? ..........................................................................................
03. WHERE ARE YOU GOING? ..........................................................................................

**14. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

01. நீங்கள் மிகவும் நல்லவர். : ..........................................................................................

**15. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

01. கவுத ஆவே : ..........................................................................................
02. மென்ன பொன்ன : ..........................................................................................
03. ஆயி கியன்ன : ..........................................................................................

**16 தொடக்கம் 28 வரையுள்ள வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

16. உணவைச் சுவையூட்டுவதற்கு பயன்படுத்தும் வாசனைத் திரவியம் அல்லாதது எது?
1. கறுவா 2. ஏலம் 3. உப்பு

17. சித்திரை புத்தாண்டு காலத்தில் பூத்துக் குலுங்கும் தாவரங்கள் எவை?
1. மா, பலா 2. முருங்கை, வேம்பு 3. வாழை. கமுகு

18. மண்ணரிப்பை தடுப்பதற்கு உதவுபவை எவை?
1. புற்கள், வாய்க்கால் 2. குழிகள், குன்றுகள் 3. மதில், கல்

19. சீனி உற்பத்திக்கு முக்கியமான தாவரம் எது?
1. கரும்பு 2. பீற்றூட் 3. கரட்

20. மரங்களில் தலை கீழாகத் தூங்கும் முலையூட்டி எது?
1. ஒட்டகம் 2. ஆந்தை 3. வௌவால்

21. கோழிகளில் சேவல் 'கொக்கரக்கோ' எனக் கூவும், பேடு எவ்வாறு கொக்கரிக்கும்?
1. கக்.... கக்.... கக் 2. கொக்... கொக்... கொக் 3. கீச்... கீச்... கீச்...

22. உலகம் சருகுகளால் மூடப்பட்டுவிடாது இருப்பதற்கு காரணமானது எது?
1. எலி 2. கரப்பான் 3. கறையான்

23. மனித இரத்தத்தை விரும்பி உறிஞ்சி குடிக்கும் நுளம்பு யாது?
   1. ஆண்நுளம்பு 3. பெண் நுளம்பு 3. இரண்டு வகையும்

24. குட்டிகளை வயிற்றுப்பையில் காவுவது கங்காரு அதே போல் வயிற்றுப் பகுதியில் காவிச் செல்வது எது?
   1. பூனை 2. குரங்கு 3. யானை

25. சேற்று நீரில் நீண்ட நேரம் படுத்திருப்பது எது?
   1. மாடு 2. ஆடு 3. எருமை

26. தண்டுகளை நடுவதன் மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரம் எது?
   1. சதைக்கரைச்சான் 2. மாமரம் 3. மரவள்ளி

27. தீக்கோழி, ஆமை, கிளி, அட்டை என்பவை இடப்பெயரும் முறைகள் ஒழுங்கில்
   1. பறக்கும், ஊரும், பறக்கும், நடக்கும்
   2. ஓடும், நீந்தும், பறக்கும், ஊரும்
   3. ஓடும், பாயும், நடக்கும், பறக்கும்

28. செல்லும் பாதையில் ஈரலிப்பான திரவத்தை ஊற்றிச் செல்வது
   1. அட்டை 2. நத்தை 3. பாம்பு

**29. உருக்களில் காணப்படும் நிழல்களைக் கொண்டு பறவைகளின் பெயர்களை எழுதுக.**



**1. ......................... 2. ......................... 3. ......................... 4. .........................**

**30. உருக்களில் காணப்படும் குறியீடுகளின் கருத்துக்களை எழுதுக.**



**1. ......................... 2. ......................... 3. ......................... 4. .........................**

**31. உருக்களில் காணப்படும் உபகரணங்களின் பயன்பாடுகளை எழுதுக.**


1. ..............................................................................................


2. ..............................................................................................


3. ..............................................................................................


4. ..............................................................................................

**32. எண்கோலங்களின் அடுத்து வரும் எண்களை எழுதுக.**

1. 100, 81, 64, 49, 36, ...................... , ...............................
2. 55, 45, 36, 28, 21, ...................... , ...............................
3. 90, 72, 56, 42, 30, ...................... , ...............................

**33. பின்னங்களின் வரிசையில் மிகக்குறைந்த பெறுமதியுள்ள பின்னங்களைச் சுற்றி வட்டமிடுக.**

1. 1) $\frac{5}{8}$ 2) $\frac{1}{3}$ 3) $\frac{1}{2}$ 4) $\frac{1}{8}$
2. 1) $\frac{1}{8}$ 2) $\frac{3}{6}$ 3) $\frac{1}{12}$ 4) $\frac{6}{12}$
3. 1) $\frac{7}{10}$ 2) $\frac{9}{10}$ 3) $\frac{2}{10}$ 4) $\frac{5}{10}$

34. தசம எண் வரிசையில் மிகப் பெரிய தசம எண்ணைத் தெரிவு செய்து வெற்றிடத்தில் எழுதுக.

1. 1) 0.7 2) 0.17 3) 0.9 4) 0.69 ....................................
2. 1) 0.08 2) 0.18 3) 0.39 4) 0.89 ....................................
3. 1) 0.4 2) 0.2 3) 0.8 4) 0.9 ....................................

35. வெற்றிடங்களைச் சரியாக நிரப்புக.

| | நாணயத்தாள் வகை | நாணயத்தாள் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 1) | ரூபா 100 | 3 | ரூபா ................................ |
| 2) | ரூபா 50 | .............................. | ரூபா 250 |
| 3) | ரூபா 20 | 8 | ரூபா ................................ |
| 4) | ரூபா ............... | 10 | ரூபா ................................ |
| | மொத்தம் | 26 | ரூபா 810 |

36. 800 ரொபிகளில் 80 ஐ மீதப்படுத்தி வைத்து மற்றைய எல்லாம் ஒரு பைக்கற்றில் 8 வீதம் இருக்குமாறு சிறிய பைக்கற்றுக்களாகப் பொதி செய்யப்பட்டன.

1) பொதி செய்யப்பட்ட ரொபிகளின் மொத்த எண்ணிக்கை யாது? ...............................................
2) எத்தனை சிறிய ரொபிப்பொதிகள் செய்யப்பட்டன? ...............................................

37. வாக்கியங்களுக்குப் பொருத்தமான மரபுச் சொற்களை எழுதுக.

1) காகம் கரையும் அதுபோல் குயில் ...............................................
2) பல்லி சொல்லும் அது போல் கிளி ...............................................
3) பூனை சீறும் அது போல் புலி ...............................................

38. வாக்கியங்களில் தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்களுக்கான திருந்திய வடிவத்தை எழுதுக.

1) நான் உங்களை **எப்பவும்** பார்த்து கொண்டிருப்பேன். ...............................................
2) கொழும்பில் **உசந்த** கட்டடங்கள் உள்ளன. ...............................................
3) நாங்கள் **தனிச்சுப்** போனோம். ...............................................

39. வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து எழுதுக.

1) ஒவ்வொரு குடும்பத்திலும் துயரங்கள் ............................ (உள்ளன / உள்ளது )
2) தேசியக்கொடி ஒரு நாட்டின் பெருமையை எடுத்துக் ............................................... ( காட்டுகின்றது / காட்டுகின்றன )
3) ஐந்து நண்பர்கள் கோயிலுக்கு ....................................... (சென்றன / சென்றார்கள் )

40. 'மகாத்மா காந்தி' எனும் தலைப்பில் நீர் அறிந்த விடயங்களை மூன்று வாக்கியங்களாக எழுதுக.

1) ..........................................................................................................................
2) ..........................................................................................................................
3) ..........................................................................................................................